රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව
அரசாங்க தகவல் திணைக்களம்
Department of Government Information

**2026.08.31 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்**

**01. 'இலங்கையில் கரும்பு கருத்திட்டத்தை' அமுல்படுத்துவதற்காக பிரேசில் அரசு மற்றும் இலங்கை அரசுக்கும் இடையிலான தொழிநுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் குறைநிரப்பு இணக்க ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்**

பரஸ்பர ரீதியாக அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்புக்களை மேம்படுத்துவதற்காக இலங்கை 2008.09.16 அன்று பிரேசில் உடன் தொழிநுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ளது. இத்தொழிநுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் கீழ் 'இலங்கையில் கரும்பு கருத்திட்டம்' எனும் பெயரிலான கருத்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கான ஒத்துழைப்பு ஒப்பந்தம், பிரேசிலின் ஒத்துழைப்பு முகவராண்மை, சாவோ காலோஸ் பெடரல் பல்கலைக்கழகம், இலங்கையின் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு மற்றும் கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் இடையில் கையொப்பமிடுவதற்காக 2026.05.25 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கைக்கும் பிரேசில் இற்கும் இடையில் கையொப்பமிடப்பட்டுள்ள தொழிநுட்ப ஒத்துழைப்புக்கள் தொடர்பான அடிப்படை ஒப்பந்தத்திற்கமைய, அதன் கீழான வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள், குறைநிரப்பு இணக்க ஒப்பந்தத்தின் மூலம் அமுல்படுத்த வேண்டும். அதற்கமைய, 'இலங்கையில் கரும்பு கருத்திட்டத்தை' அமுல்படுத்துவதற்குரிய குறைநிரப்பு இணக்க ஒப்பந்தத்தில் (Complementary Adjustment Agreement) பிரேசில் மற்றும் இலங்கைக்கும் இடையில் கையொப்பமிடுவதற்கு கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. இலங்கை மற்றும் கொரிய குடியரசுக்கும் இடையில் குற்றவியல் விடயங்களில் பரஸ்பர சட்ட ஒத்துத்துழைப்புக்களைக் காட்டுதல் பற்றிய ஒப்பந்தம்**

குற்றவியல் விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்புக்களைக் காட்டுதல் தொடர்பாக கொரிய குடியரசு மற்றும் இலங்கை அரசுக்கும் இடையிலான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு 2023.12.11 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆயினும், வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கமைய ஒப்பந்தத்தில் இருதரப்பும் கையொப்பமிடுவதற்கு இயலுமை கிட்டவில்லை. குறித்த ஒப்பந்தத்தின் மூலம், நீதிமன்ற ஆவணங்களை ஒப்படைத்தல் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் பயன்படுத்துவதற்கு சாட்சியங்களைச் சேகரித்தல் போன்றவற்றுக்கு அரசுகளால் வேறு அரசுகளுக்கு பரஸ்பர ரீதியான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு வாய்ப்புக்கள் கிடைக்கும். அதற்கமைய, கொரிய குடியரசு மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் இடையில் குற்றவியல் விடயங்களில் பரஸ்பர சட்ட ஒத்துத்துழைப்புக்களைக் காட்டுதல் பற்றிய ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



163, කිරුළපන මාවත, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை.
163, Kirulapona Avenue, Colombo 05, Sri Lanka.
දු தொ T - (+94 11) 2515759
ෆැ பெ F - (+94 11) 2514753
ඊ மி E - dg@dgi.gov.lk
www.dgi.gov.lk
www.news.lk

**03. இலங்கையின் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மற்றும் சீனக் குடியரசின் தேசிய குடிவரவு நிர்வாகத்திற்கும் இடையிலான குடிவரவுக் கட்டுப்பாட்டு ஒத்துழைப்புக்கள் தொடர்பான இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ளல்**

இலங்கையின் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மற்றும் சீனக் குடியரசின் தேசிய குடிவரவு நிர்வாகத்திற்கும் இடையிலான குடிவரவுக் கட்டுப்பாட்டு ஒத்துழைப்புக்கள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக இருதரப்பினர்களுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கிடையிலான நிறுவனங்களின் பிரதானிகள் மற்றும் உத்தியோகபூர்வ பிரதிநிதிகள் மட்டத்தில் மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தைகள் மற்றும் விஜயங்களுக்கான வசதிப்படுத்தல்களை மேற்கொள்ளல், முக்கியமான உத்தியோகபூர்வ தகவல்கள் மற்றும் புலன் தகவல்கள், முனைப்பான மற்றும் சாதகமான அணுகுமுறைகள் ஊடாக இருநாடுகளுக்கிடையிலான வர்த்தகங்கள், முதலீடுகள், சுற்றுலாத்துறை, தொழிநுட்ப, விஞ்ஞானத் துறைகளில் ஈடுபடுகின்ற பிரஜைகள் தொடர்பான விடயதானங்களுக்கான விசாக்கள், குடிவரவு மற்றும் குடியகல்வு விவகாரங்கள் தொடர்பான வசதிப்படுத்தல்கள், திட்டமிட்ட குற்றச் செயல்களாகக் கருதப்படும் மனித வியாபாரம் மற்றும் மனிதக் கடத்தல்களுடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அலுவலர்களின் அறிவு, திறன் மற்றும் இயலளவுகளை அபிவிருத்தி செய்வதற்கான செயலமர்வுகளை ஒழுங்குபடுத்தல் போன்ற நோக்கங்களை அடைவதற்கு உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. உத்தேச ஒப்பந்த வரைபுக்கு வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் அவர்களின் ஒப்புதல் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. பிம்ஸ்டெக் தொழிநுட்ப ஒப்படைகள் வசதியை இலங்கையில் தாபிப்பதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்**

2008 ஆம் ஆண்டில் இந்தியாவின் புதுடில்லி நகரில் இடம்பெற்ற பல்துறைசார், தொழிநுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்களுக்கான வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளின் தொடக்க முயற்சிகள் அமைப்பின் (BIMSTEC) இரண்டாவது அரச தலைவர்கள் மாநாட்டில் பிராந்திய ஒத்துழைப்புக்களை அதிகரிக்கும் நோக்கில் BIMSTEC தொழிநுட்ப ஒப்படைகள் வசதிக்காக உபசரிப்பு நாடொன்றுடன் ஏற்படுத்திக் கொள்ளப்படும் ஒப்பந்தத்தின் மூலம் (Host Country Agreement) இலங்கையில் தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான ஒத்துழைப்பு ஒப்பந்தம் 2022.03.30 அன்று கொழும்பில் இடம்பெற்ற ஐந்தாவது BIMSTEC மாநாட்டில் அந்தந்த உறுப்பு நாடுகள் கையொப்பமிட்டுள்ளன. BIMSTEC உறுப்பு நாடுகளின் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு தொழிநுட்பத்தை வழங்குதல், இயலளவு விருத்தி மற்றும் புலமைச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதே, இத்தொழிநுட்ப ஒப்படைப்புக்கள் வசதியின் முக்கியமான நோக்கமாக அமையும். குறித்த ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்கமைய தொழிநுட்ப ஒப்படைப்புக்கள் வசதியின் சட்டபூர்வ நிலைமை, சிறப்புரிமைகள் மற்றும் விடுபாட்டுரிமைகளை முறைமைப்படுத்துவதற்காக உபசரிப்பு நாடான

இலங்கை மற்றும் BIMSTEC செயலகத்திற்கும் இடையில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்காக வரைவாக்கம் செய்யப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கு உரிய நிறுவனங்களின் அங்கீகாரம் மற்றும் சட்ட ரீதியான ஒப்புதல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய, உத்தேச ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. மிதிவெடிகளை அகற்றும் மனிதாபிமான வேலைத்திட்டங்களைத் தொடர்ந்தும் அமுல்படுத்தல்**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மோதல்கள் நிலவிய காலப்பகுதியில், அப்பிரதேசங்களில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றி, அப்பிரதேசங்களில் வாழ்கின்ற குடும்பங்களின் சமூக வாழ்வை மீள்நிலைக்குக் கொண்டு வருவதற்காகவும், அக்குடும்பங்களை மீள்குடியேற்றல் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான காணிகளை விடுவித்துக் கொள்ளல் போன்றன மிதிவெடியகற்றும் வேலைத்திட்டத்தின் அடிப்படை நோக்கங்களாகும். அதற்கமைய, 2002 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் மிதிவெடிகளை அகற்றும் மனிதாபிமான வேலைத்திட்டத்தின் பணிகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் இலங்கை இராணுவத்தின் மனிதாபிமான மிதிவெடியகற்றும் அலகின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டத்தின் கீழ் 2026.01.01 ஆம் திகதியாகும் போது மேலும் 21.3 சதுர கிலோமீற்றர்கள் நிலப்பரப்பில் மிதிவெடிகள் அகற்றப்பட வேண்டியுள்ளது. தற்போது இலங்கை இராணுவத்தின் மனிதாபிமான மிதிவெடியகற்றும் அலகுடன் இணைந்து மிதிவெடியகற்றும் பணிகளில் ஈடுபடுகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களாக, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களான Mines Advisory Group மற்றும் The Halo Trust உம் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களான Delvon Assistance for Social Harmony மற்றும் Skavita Humanitarian Assistance and Relief Project போன்ற நிறுவனங்கள் பணியாற்றுகின்றன. மிதிவெடியகற்றும் பணிகளை மேற்கொள்ளும் போது மிதிவெடியகற்றும் நிறுவனங்களுடன் மிதிவெடியகற்றும் தேசிய நிலையத்துடன் வருடாந்தம் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படும். 2026.01.01 ஆம் திகதி தொடக்கம் 2026.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குரிய மேற்குறிப்பிட்ட நிறுவனங்களுடன் இப்பணிகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 04 இல் கையொப்பமிடுவதற்கு வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. ஹோமாகம, பிட்டிபன, மாஹேனவத்த ‘தொழிநுட்ப நகர கருத்திட்டத்திற்கான’ வீதி வசதிகளை மேம்படுத்தல்**

புத்தாக்கம் மற்றும் அறிவை மையமாகக் கொண்ட தொழிநுட்பத்தை அடிப்படையில் நாட்டின் பொருளாதாரத்திற்கு அதிக பங்களிப்புக்களை வழங்கும் நோக்கில் ஹோமாகம, பிட்டிபன, மாஹேனவத்த ‘தொழிநுட்ப நகர கருத்திட்டம்’ ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஹோமாகம நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்து தொழிநுட்ப நகரத்திற்கு நேரடியாக அணுகலை வழங்கும் நோக்கில் ஹோமாகம, வலவ்வத்த தொடக்கம் கட்டுவான ஊடாக மேற்கு உப வீதியின் நிர்மாணப் பணிகள் 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வீதியை ஹயிலெவல் வீதியுடன் இணைப்பதற்கு 50 மீற்றர் தூரம் நிர்மாணிக்கப்பட வேண்டியுள்ளது. அத்துடன்,

இலங்கை பசுமைப் பல்கலைக்கழகத்திலிருந்து இலங்கை உயிர்ம தொழிநுட்ப நிறுவகம் வரைக்குமான அணுகல் வீதியின் மூலம் பிட்டிபன, தாம்பே வீதி தொழிநுட்ப நகரத்தின் உள்ளகப் பகுதி ஊடாக கொட்டாவ – தலகல வீதியுடன் இணைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வீதியின் 650 மீற்றர் பகுதி மேலும் நிர்மாணிக்கப்பட வேண்டியுள்ளது. அதற்கமைய, மேற்கு உப வீதி (ஹோமாகம, வலவ்வத்த தொடக்கம் கட்டுவான வரைக்குமான) ஹயிலெவல் வீதியுடன் இணைக்கும் வீதிப்பகுதி மற்றும் இலங்கை பசுமை பல்கலைக்கழகம் தொடக்கம் இலங்கை உயிர்ம தெழிநுட்ப நிறுவகம் வரையான வீதியில் எஞ்சிய நிர்மாணப் பணிகளை உள்நாட்டு நிதியைப் பயன்படுத்திப் பூர்த்தி செய்வதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 07. கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்தல்

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தகவல் தொழிநுட்பம், ஆலோசனை சேவைகள், வணிகச் செயன்முறைகளை வெளிவாரியாகப் பெற்றுக் கொள்ளல், விநியோக சேவைகள் (லொஜிஸ்ரிக்), உட்கட்டமைப்பு வசதிகள் இரட்டை/கூட்டிணைந்த வணிகக் கட்டமைப்புக்கள் மற்றும் பொது வணிகங்கள் மற்றும் வணிகத் துறைகளுக்குரிய 68 வணிக நிறுவனங்களை இரண்டாம் நிலை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகங்களாக பெயரிடுவதற்கு 2026.03.30 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த 68 வணிகங்களையும் இரண்டாம் நிலை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகங்களாக பெயரிட்டு 2026.04.10 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. இவ் ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 08. 1897 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்

1897 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டம், தொற்று நோய்கள் பரவுவதைத் தடுத்தல் மற்றும் தனிமைப்படுத்தல் படிமுறைகள் அமுல்படுத்தப்படுவதை நிர்வகிக்கின்ற இலங்கையிலுள்ள முக்கிய சட்டமாகும். ஆயினும், உலகளாவிய ரீதியிலும், உள்நாட்டிலும் தற்போது ஆட்களின், பண்டங்களின் மற்றும் சேவைகளின் தொழிற்பாடுகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளமையால், தொடர்ந்து இயங்கிவரும் உலகளாவிய விஜயங்கள் மற்றும் உலகளாவிய வர்த்தகத்தால் தொற்று நோய்கள் நாடுகளுக்கிடையே வேகமாகப் பரவி வருகின்றமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அதற்கமைய, 1897 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2016 ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஆயினும், குறித்த திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. அதனால், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கமைய, கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ள

தொற்றுநோய் நிலைமைகளின் போது பெற்றுக்கொண்ட அனுபவங்களைக் கருத்தில் கொண்டு, தற்போது தயாரிக்கப்பட்டுள்ள திருத்தச் சட்டமூலத்தை ஆராய்ந்து, சமகால சுகாதார சவால்களுக்கும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சவால்களுக்கும் முகங்கொடுக்கக் கூடிய வகையில் பொருத்தமான திருத்தங்களை முன்மொழிவதற்கான மீளாய்வுக் குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சமுதாயஞ்சார் சீர்திருத்தச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

மீண்டும் மீண்டும் குற்றங்களைச் செய்கின்ற தவறாளர்கள் தொடர்பாக மிகவும் பயனுறுதி வாய்ந்த சட்டத்தை அமுல்படுத்தக்கூடிய வகையில் உரிய ஏற்பாடுகளை காலத்தோடு தழுவியதாக இற்றைப்படுத்தி 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சமுதாயஞ்சார் சீர்திருத்தச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு 2025.04.07 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த அங்கீகாரத்தின் பிரகாரம், சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைய, சமுதாயஞ்சார் சீர்திருத்தச் (திருத்தச்) சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் இயங்குகின்ற தாதியக் கல்லூரிகளுக்கான தாதிய விரிவுரையாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்**

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் ஆரம்ப தாதிய படிப்புக்குப் பின்னரான கற்கைக் கல்லூரிகள் உள்ளடங்கலாக 17 தாதியக் கல்லூரிகள் காணப்படுகின்றன. இக்கல்லூரிகளில் 2026.03.31 ஆம் திகதிக்கு I ஆம் தரம்/மேற்தர தாதியர்கள் (கல்வி) பதவி வெற்றிடங்கள் 142 காணப்படுவதுடன், 24 அலுவலர்கள் 2025.12.31 ஆம் திகதி தொடக்கம் விசேடதர தாதியர் (கல்வி) பதவி வெற்றிடத்தின் அடிப்படையில் விசேடதரத்திற்கு பதவியுயர்வு பெறவுள்ளமையால், மொத்தமாக 166 பதவி வெற்றிடங்கள் நிலவுகின்றன. அத்துடன், 24 விசேடதர தாதியர் (கல்வி) பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. தற்போது தாதிய கல்லூரி தாதிய பீடமாக மாற்றப்பட்டு தாதிய டிப்ளோமா பாடநெறி தாதிய பட்டப்படிப்பாக தரமுயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், I ஆம் தரம்/மேற்தர தாதியர்கள் (கல்வி) பதவி வெற்றிடங்களுக்கு நியமிப்பதற்கான பயிற்சிக்கான ஆட்சேர்ப்புக்கள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அதற்கமைய, தற்போது நிலவுகின்ற வெற்றிடங்களை முறையான வகையில் பூர்த்தி செய்யும் வரைக்கும் அரச தாதிய கல்லூரிகளில் பணிபுரிகின்ற ஓய்வுநிலை தாதிய விரிவுரையாளர்கள் மற்றும் முப்படைக்குரிய தாதிய கல்லூரிகளில் பணிபுரிகின்ற ஓய்வுபெற்ற அல்லது சட்டபூர்வமாக கடமையிலிருந்து விலகியுள்ள தாதிய விரிவுரையார்கள் I ஆம் தரம்/மேற்தர தாதியர்கள் (கல்வி) பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 11. விதாதா வேலைத்திட்டத்தை மீள்கட்டமைத்தல்

விஞ்ஞான ரீதியான அறிவு மற்றும் ஆராய்ச்சிகள் மூலம் உருவாகியுள்ள புத்தாக்கங்கள், கிராமிய மட்டத்தில் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு அணுகச் செய்வதன் மூலம் தேசிய விஞ்ஞான ரீதியான இயலளவு மற்றும் கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்காக விதாதா வேலைத்திட்டம் 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது 315 பிரதேச செயலகப் பிரிவுகளில் விதாதா வள நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. சமகால விதாதா தொழிற்பாட்டு வடிவமைப்பு, கட்டமைப்பு ரீதியாக நெகிழ்வான மட்டத்தில் காணப்படாமையாலும் மற்றும் இற்றைப்படுத்தப்படாத திறன்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வேலைத்திட்டங்களின் அடிப்படையில் அமைந்துள்ளமையால், துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் உலக சந்தைப் போக்குகள், காலநிலை மாற்றங்களால் ஏற்படுகின்ற இடர்கள் மிகுந்த நிலைமைகள் மற்றும் நவீன தொழிநுட்பத்துடன் இசைந்து செல்வதற்கு இயலாமல் போயுள்ளது. அதனால், நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள 315 விதாதா வள நிலையங்களை உள்ளடக்கியவாறு, 2026 – 2030 ஆண்டுக்கான மூலோபாய பணிச்சட்டகத்தை அமுல்படுத்துவதற்காக 2025.11.10 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்கீழ், விஞ்ஞான ரீதியான தரவு சேகரிக்கும் அலகு, சேவைகள் மற்றும் மூலாதாரங்கள் மற்றும் புலமைச் சொத்து அலகு மற்றும் தரம் மற்றும் தரநிர்ணய அலகாக ஒன்றுக்கொன்று தொடர்புடைய மூன்று விசேட அலகுகளின் கீழ் அனைத்து விதாதா வள நிலையங்களை இயக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனையைக் கருத்தில் கொண்டு, விதாதா வள நிலையங்கள் புதிய நிறுவன வடிவமைப்பின் கீழ் மீள்கட்டமைப்பதற்காக அமைச்சரவை கொள்கை ரீதியான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

## 12. நேபாள அரசுக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை அன்பளிப்பாக வழங்குதல்

2026.08.26 ஆம் திகதி, வடக்கு நேபாளத்தில் றசுவா மாவட்டத்தில் ஏற்பட்ட மோசமான திடீர் வெள்ள நிலைமையால் அதிகமானவர்கள் உயிரிழந்து அதிகளவான சொத்துக்களும் அழிவடைந்துள்ளன. இவ் இடர் நிலைமையின் மோசமான தன்மையால் நேபாள அரசுக்கும் மற்றும் மக்களுக்கு குறிப்பிடத்தக்களவு மனிதாபிமான சுமை ஏற்பட்டுள்ளதுடன், காணாமல் போனவர்களைத் தேடும் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளல், தொடர்ந்தும் வெள்ளம் ஏற்படும் அபாயம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு பாரியளவு பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றமை போன்ற காரணங்களால் நிவாரணங்கள் மற்றும் மீள்கட்டமைப்பு ஆதரவுகளை துரிதமாக வழங்க வேண்டியுள்ளது. இலங்கைக்கும் நேபாளத்திற்கும் இடையில் காணப்படுகின்ற ஆழமான கலாச்சார, சமய மற்றும் பரஸ்பர வெகுசனத் தொடர்புகளின் அடிப்படையில் நீண்டகால நட்புகள் மற்றும் மோசமான இயற்கை அனர்த்தத்தால் இடம்பெற்ற மோசமான மனிதாபிமான மற்றும் பொருளாதாரப் பாதிப்புக்கள் தொடர்பாக இலங்கையின் அனுபவங்களைக் கருத்தில் கொண்டு, இலங்கை அரசால் நேபாள அரசுக்கு மனிதாபிமான உதவியாக ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை அன்பளிப்பாக வழங்குவதற்கு கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. இலங்கையில் தேசிய மாணவர் படையணி மற்றும் இந்தியாவின் தேசிய மாணவர் படையணிக்கும் இடையில் ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

இலங்கை மற்றும் இந்திய மாணவர் படையணிகளுக்கிடையில் தற்போது நடைமுறையிலுள்ள இளைஞர் பரிமாற்ற வேலைத்திட்டங்கள், இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவை அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்வதுடன், இப்பங்களிப்புக்களைத் தொடர்ந்தும் பலப்படுத்துவதற்கு குறித்த நிறுவனங்களுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இவ் ஒப்பந்தத்தின் மூலம் ஒருங்கிணைந்த விசேட பயிற்சிகள் மற்றும் தலைமைத்துவ வேலைத்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அமுல்படுத்தல் போன்ற பணிகளுக்கு இரு நாடுகளின் மாணவர் படையணி அங்கத்தவர்களின் பரிமாற்று வேலைத்திட்டங்கள் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, இலங்கை தேசிய மாணவர் படையணிக்கும், இந்திய தேசிய மாணவர் படையணிக்கும் இடையில் ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**